## சென்னையில் மெட்ரோ ரயில் நிலையங்களின்

# இணைப்பு வாகனங்களில் 9.58 லட்சம் பேர் பயணம்

**சென்னை**

சென்னையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் இயக்கப்படும் இணைப்பு வாகனங்களில் இதுவரையில் 9.58 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் முக்கியமான மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து முக்கிய பேருந்து, ரயில் நிலையங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள், ஐடி நிறுவனங்களை இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, ஆட்டோ, சிறிய ரக வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

3 கிமீ தூரத்துக்கு ஷேர் ஆட்டோக்களில் ஒருவருக்கு ரூ.5 எனவும், இதர வாகனங்களுக்கு ரூ.10 எனவும் வசூலிக்கப்படுகிறது. பரங்கிமலை, கிண்டி உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து இணைப்பு வாகன வசதி இருக்கும் இடத்தைக் குறிப்பிடும் வகையில் தரைகளில் 'பாதைகள் வரைந்து' விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த புதிய முறை பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

இந்த இணைப்பு வாகனகளில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 87,701 பேர் பயணம் செய்துள்ளனர். இந்த இணைப்பு வாகன சேவையைத் தொடங்கி இதுவரை 9 லட்சத்து 58 ஆயிரத்து 352 பேர் பயணம் செய்துள்ளனர் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.